# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுக் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 11 நவம்பர் - 1998 இதழ் - 11




வெளியிடுவோர்
**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30-11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00-12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30-6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15-8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00-9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


1. "உங்களுக்கும் வெகு வருத்தமா" 1
2. ஞானஸ்நானம் கொடுப்பது எப்படி? 9
3. பெண்களும், ஊழியமும் 14
4. தேவத்துவம் 17
5. இடுக்கமான வழி 19
6 வாசிப்பதின் பலன்கள் 21
7. சத்தியம் உங்களை விடுதலையாக்கும் 23
8. ஆகாய் தீர்க்கனின் புத்தகம் 25
9. நம்மை நாமே வஞ்சிப்பது எப்படி? 26
10. வேறொரு சுவிசேஷம் இல்லையே 29
11. வேதமும் அப்படியே சொல்லுகிறது 31

# THIRUMARAI AASAAN

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C.CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 11 NOVEMBER -1998 Issue -11

ஆசிரியர் உரை

## "உங்களுக்கும் வெகு வருத்தமா?"

உங்களுக்கும் வெகு வருத்தமா? என்று கேட்கும் போதே நம் எல்லோருக்கும் ஒரு காரியம் மிக நன்றாக விளங்கும். எதுவோ, யாருக்கோ, எங்கோ எப்போதோ, மிக வருத்தமாக இருந்துள்ளது என்பது. நான் சொல்லும் இந்த 'வருத்தம்', பழைய ஏற்பாட்டிலுள்ள இராஜாக்களின் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. நம்முடைய தமிழ் வேதாகமத்தில் 'வருத்தம்' என்ற வார்த்தை தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், இதே வார்த்தைக்கு, ஆங்கில வேதாகமத்தின் வேறுபட்ட மொழியாக்கங்களில், "மிக அதிகம்", "வெகுவருத்தம்" "வெகுதூரம்" என்ற வித்தியாசமான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சரி,இப்பொழுது தமிழ் வேதாகமத்தில், இவ்வார்த்தை இடம் பெற்றுள்ள வசனத்தைக் கவனியுங்கள். **"ஆகையால், ராஜாவானவன் யோசனை பண்ணி, பொன்னினால் இரண்டு கன்றுக் குட்டிகளை உண்டாக்கி ஜனங்களைப் பார்த்து நீங்கள் எருசலேமுக்குப் போகிறது உங்களுக்கு வருத்தம், இஸ்ரவேலரே, இதோ, இவைகள் உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தேவர்கள் என்று சொல்லி, ஒன்றை பெத்தேலிலும், ஒன்றைத் தாணிலும் ஸ்தாபித்தான் இந்தக் காரியம் பாவமாயிற்று." (I ராஜா 12:28-30)**

இந்த வசனத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள, இதன் பின்னணியைத் தெரிந்து கொள்வது மிக அவசியமானதால், அது குறித்து கொஞ்சம் உங்களுக்கு விளக்குகிறேன்.

தேவன் கொடுத்த அளவில்லாத ஞானத்தை, அந்தத் தேவனுக்குப் பிரியமாக பயன்படுத்தாமல், மதிகெட்டு, மக்கு மனைவிகளின் மந்திரப் பேச்சில் மயங்கி, விக்கிரகங்களின் பின்னால், ஒரு வாயில்லா பூச்சியைப் போல, மௌனமாக பவனி வந்த (1ராஜா 11:5-10) ராஜாவாகிய சாலமோனின் நாட்களுக்குப் பிறகு தேவனால் பராமரிக்கப்பட்டு வந்த ஒன்றுபட்ட இஸ்ரவேல் ராஜ்யம் வடக்கு, தெற்கு என்று பிளவுபட்டுப்போயிற்று.

இப்பிளவுக்கு காரணம் ஞானத்தந்தையாகிய சாலமோனுக்குப் பிறந்த மூட மகன் ரெகொபெயாம் தான். சாலமோனின் மறைவிற்குப் பிறகு அவனுடைய மகன் ரெகாபெயாமை ஒரே ஒரு நியாயமான நிபந்தனையினடிப்படையில் ராஜாவாக ஏற்றுக் கொள்ள ஜனங்கள் தயாராகவே இருந்தார்கள்(12:1-4) அந்த நிபந்தனை, எல்லாக் குடிமக்களும் ஒரு ராஜாவினிடத்தில் எதிர்பார்க்கின்ற ஒன்றுதான் "நீர் உம்முடைய தகப்பன் சுமத்தின கடினமான வேலையையும், அவர் எங்கள் மேல் வைத்த பாரமான நுகத்தையும் லகுவாக்கும்; அப்பொழுது உம்மைச் சேவிப்போம் என்றார்கள் (12:4)

ஆனால், இந்த ரெகொபெயாம் ஆலோசனை என்ற பெயரில் சில நாட்களை இழுத்தடித்து, இறுதியில் முதியோருடைய வார்த்தைக்கு முழுக்குப்போட்டுவிட்டு, வாலிபருடைய ஆலோசனைக்கு அடிமைப்பட்டு, ஜனங்கள் ஆத்திரப்படும் கடின வார்த்தைகளைப் பேசினபடியால், பெரும்பாலான இஸ்ரவேலர் அவனிடமிருந்து பிரிந்து போனார்கள் (12:12-19) ஒருவேளை பிரிந்து போனது தேவச்சித்தமாக இருந்தாலும், இந்த ஞானியின் மகன் இதற்குக் காரணமாயிருந்திருக்கத் தேவையில்லையென்றே தோன்றுகிறது. ஒருவேளை, இவன் புத்தியாய் நடந்திருந்தால், இதைத் தவிர்த்திருக்கலாமோ?

இப்படி, இந்த ரெகொபெயாம் என்ற ஒரு தனி மனிதன் மீது ஏற்பட்ட கோபத்தினால், இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார். ரெகொ-பெயாமின் தலைமையை ஏற்க மறுத்து, ஒரு காலக்கட்டத்தில், சாலமோன் ராஜாவினிடத்தில் கலகம் செய்து ஓடிப்போன(11:40) **யெரொபெயாமை, தங்களுக்கு ராஜாவாக ஏற்படுத்திக் கொண்டு தனியாகப் பிரிந்து போனார்கள். தனிப்பட்ட மனிதன் மீது ஏற்பட்ட பெருங்கோபம் அவர்கள் கண்களை முற்றிலுமாக மறைத்தபடியால், தங்கள் ராஜாவை மாத்திரமல்ல, தேவனால் கொடுக்கப்பட்ட பட்டணமாகிய எருசலேமை தங்கள் ஆன்மீக வாழ்வுக்கு அடித்தளமாக இருக்கும் எருசலேமை விட்டுப் போகிறோம்** என்பது அவர்களுக்குக் கொஞ்சம் தெரியாமல் போய்விட்டது. தாங்கள் செய்யும் **மிகப்பெரிய தவறையும்,** அதனால் ஏற்படும் **கடும் விளைவுகளையும்** அப்பொழுது அவர்கள் அறியாமலிருந்தார்கள்.

இஸ்ரவேலருடைய வாழ்க்கையில் எருசலேம் என்பது முக்கியமானது மட்டுமல்ல, அது அவர்களுடைய வாழ்க்கையில் இரண்டறக்கலந்த ஒன்று. எருசலேம் இஸ்ரவேலருக்குத் தலைநகரமாகவும், ஆட்சிக்கட்டிலின் பீடமாகவும், ஆன்மீக வாழ்க்கையின் மையமாகவும், வழிபாட்டுத்தலமாகவும் இருந்தது.

எருசலேம் மகாராஜாவின் நகரமென்றும் அழைக்கப்பட்டுள்ளது(மத் 5:35) இந்த எருசலேமை நோக்கித்தான் தானியேல் தினமும் மூன்று வேளை. ஜெபித்தான். (தானி 6:10) இந்த எருசலேமின் பாழ்பட்ட நிலையைக் கேள்விப்பட்டுத்தான் சூசான் அரண்மனையில் ஊழியம் செய்த நெகேமியா துக்கம் தாளாமல் உபவாசித்து அழுதான்(நெ கே 1:4) ஒட்டுமொத்த இஸ்ரவேலருக்கும் எருசலேமின் மீதிருந்த பற்றை சங்கீதத்தில் நாம் காண முடியும் " எருசலேமே, நான் உன்னை மறந்தால் என் வலது கை தன் தொழிலை மறப்பதாக. நான் உன்னை நினையாமலும் எருசலேமை என் முக்கியமான மகிழ்ச்சியிலும் எண்ணாமலும் போனால், என் நாவு என் மேல் வாயோடே ஒட்டிக் கொள்வதாக" (சங் 137:5,6)

இவ்வளவு மகத்துவமான எருசலேமை விட்டுத்தாங்கள் போகிறோம் என்பது கூடத் தெரியாமல், அந்த இமாலயத்தவறு கோபத்தினாலும் ஒரு வேகத்தினாலும் நடந்துவிட்டது. கோபமும்,விவேகமற்ற வேகமும் இவர்களை எந்தளவுக்கு மோசம்போக்கினது தெரியுமா? தொடர்ந்து படியுங்கள்.

இங்கே, ஜனங்கள் தன்னைத் தகுதியினடிப்படையில் ராஜாவாகத் தெரிந்தெடுக்கவில்லையென்பதை கனகச்சிதமாகப் புரிந்து கொண்ட அதிர்ஷ்ட ராஜாவாகிய யெரொபெயாம், ஜனங்களைத் தொடர்ந்து தன் வசமே வைத்திருக்கத் தேவையான திட சிந்தனையிலும் அதிரடித் திட்டதிலும் இறங்கினான். எருசலேமை ஜனங்கள் மனப்பூர்வமாக விட்டு வரவில்லையென்பதையும் அவன் மிக நன்றாக அறிந்திருந்தான். ஜனங்கள் தங்களுடைய மார்க்கக் கடமைகளை நிறைவேற்ற எருசலேமுக்குப் போக்கும்வரத்துமாக இருப்பது. தனது பதவி சுகத்திற்கு ஆபத்தாகிவிடுமென்று எண்ணி, தன்னுடைய எல்லைக்குள்ளே, எருசலேமின் மாதிரியின்படியே ஒரு பொய் மார்க்கத்துக்கு ஏற்பாடு செய்தான் (12:28)

தனது சொந்த லாபத்திற்காகவே முற்றிலும் பொய் மார்க்கத்தை உண்டு பண்ணின பெரொபெயாம் அதன் முழு உண்மையையும் மறைத்து **"நீங்கள் எருசலேமுக்குப் போவது உங்களுக்கு வருத்தம்"** என்று கூறி பழைய ஏற்பாட்டின் மிகப் பெரிய பொய்களில் ஒன்றை கூசாமல் கூறினான். "எருசலேமுக்குப் போவது ஜனங்களுக்கு வருத்தமாம்"எப்படியென்று பார்த்தீர்களா?

உண்மையில் அது யெரொபெயாமுக்குத் தான் வருத்தம் . அவனது பதவிக்கு, புகழுக்கு, சொகுசு வாழ்க்கைக்கு, வருமானத்துக்கு, அந்தஸ்துக்கு என்று அவனுக்குத்தான் நஷ்டம். ஆனால், தன்னலத்திற்காக, ஒரு தேசத்து ஜனங்களை தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களை, தேவனை அறிந்த ஜனங்களை, தேவனுக்கு ஓரளவாவது பயப்படுகிற ஜனங்களை வெகுவாக மோசம்போக்கினான். எருசலேமுக்குப் போகவிடாமல்,சதி செய்து தடை ஏற்படுத்தினதுமல்லாமல், என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம் என்று சொன்ன தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக விக்கிரகங்களை உண்டு பண்ணி (12:28) ஒன்றைப் பெத்தேலிலும்,

ஒன்றைத்தாணிலும் ஸ்தாபித்தான் (2.29) தாணும்,பெத்தேலும் வடக்கிலும் தெற்கிலுமுள்ள பட்டணங்கள். அதாவது. யூதாவிலுள்ள ஒரு எருசலேமுக்குப் பதிலாக, இஸ்ரவேலில் இரண்டு எருசலேம்களை உண்டாக்கினான். ஜனங்கள் மீது எவ்வளவு அக்கறை பார்த்தீர்களா?

இன்னும் தேவனால் தன்னுடைய ஊழியத்திற்கென்று தெரிந்து கொள்ளப்பட்ட லேவி கோத்திரத்தாரை ஆசாரியர்களாக இருக்க தொடர்ந்து அனுமதித்தால், ஒரு வேளை அவர்கள் காலப்போக்கில், யெகோவா வணக்கத்திற்கு வழி நடத்தி விடுவார்கள் என்று அஞ்சி, அவர்களைப் புறக்கணித்து, அவர்கள் ஊரைவிட்டே ஓடிப்போகும்படி செய்து (II நாளா 13.9) ஜனத்தில் ஈனமானவர்களை ஆசாரியர்களாக ஏற்படுத்தினான் (வ.32)மேலும் எருசலேமில், வேதனால் நியமித்து, கொண்டாடப்படும் பண்டிகைகளுக்கொப்பாக,பண்டிகை நாட்களை தன் மனதில் தானே நியமித்து ஏற்படுத்தினான்(வ.33)

தனக்காக மாத்திரம் இவையனைத்தையும் செய்துவிட்டு, ஜனங்களுக்காகவே எல்லாவற்றையும் செய்ததைப்போல பாசாங்கு காட்டி, **"நீங்கள் எருசலேமுக்குப் போவது உங்களுக்கு வருத்தம்"** என்று பசப்பு வார்த்தைகளைக் கூறி, அதில் வெற்றியும் பெற்றுவிட்டான்.

இவன் செய்த காரியம் அனைத்தும் இவனுக்கு நன்றாகவே பட்டது . ஜனங்களுக்கும் பிரியமாயிருந்தது. ஆனால், **"இந்தக் காரியம் பாவமாயிற்று"** என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது (12:30) இப்படி பாவமான இந்தக் காரியத்தில் சிக்கிக்கொண்ட இஸ்ரவேலின் பின் சரித்திரம் உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக தேவனைவிட்டு விலகி, முற்றிலும் விக்கிரக வணக்கத்தில் மூழ்கி, யெகோவாவுக்கும் தங்களுக்கும் எந்த சம்பந்தமுமில்லையென்ற நிலைக்கு வந்து விட்டார்கள் அதன் விளைவு? ஆன்ம வாழ்விலே அழிந்துபோனதோடல்லாமல். சரீர வாழ்விலும் எதிரிகளுக்கு அடிமைப்பட்டு, கி.மு. 722 முதல் சரித்திரத்தின் பக்கங்களிலிருந்தே மாயமாக மறைந்துவிட்டார்கள். பரலோகத்தின் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களுக்கு நேர்ந்த கதியைக் கவனித்தீர்களா?

சரி, நாம் பார்த்த இந்த சரித்திர நிகழ்வுகளை அப்படியே நெஞ்சில் நிறுத்தி, நம்முடைய நாட்களிலிருக்கும் கிறிஸ்துவ மார்க்கத்தை, அப்படியே உற்றுப் பார்த்தால், ஒரு வேளை நாம் யெரொபெயாமின் காலத்தில் தான் வாழ்கிறோமா என்ற சந்தேகம் வலுவாக ஏற்படுகிறது. கிட்டத்தட்ட அதையொத்த சம்பவங்கள் அப்படியே நிகழ்கிறது. இஸ்ரவேல் மக்கள் மெய் வணக்கத்திலிருந்து விலகி, ஒன்றுமில்லாமல் போனதுபோல், கிறிஸ்தவ சமுதாயம் மெய்ப்பக்தியிலிருந்து தடம் புரண்டு நித்தியத்தை இழந்துபோகுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது.

ஆகவே, இதை வாசிக்கும் நாம் நம்முடைய ஆன்மீக வாழ்வில் ஒன்று மில்லாமல் போய்விடாமலிருக்க இதிலிருந்து சில பாடங்களைக் கற் றுக் கொள்வது அவசியம்.

## I. எருசலேமும், எருசலேம் சுவிசேஷமும்:

முதலாவது, எப்படி பழைய ஏற்பாட்டின் நாட்களில், இஸ்ரவேலருக்கு எருசலேம் ஒரு முக்கிய இடமாக இருந்ததோ, அதைப் போலவே, இன்றைக்கு கிறிஸ்தவர்களாக வாழ விரும்புபவர்களுக்கும் எருசலேம் ஒருவகையில் முக்கியமானதாகவே உள்ளது. இங்கே, **எருசலேம் ஒரு புனித ஸ்தலம்** என்று நான் **நிச்சயமாக சொல்லவில்லை.** இருப்பினும், எருசலேமுக்கும் புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி வாழவிரும்புபவர்களுக்கும் ஒரு உறவு இருக்கவே செய்கிறது. இவ்வுண் மையை யாரும் மறுக்கமுடியாது.

புறஜாதியனாயிருந்த கொர்நெலியுவும், அவன் வீட்டாரும் இரட் சிக்கப்பட்ட சம்பவத்தை எருசலேமிலிருந்த யூதர்களுக்கு பேதுரு அப்போஸ்தலன் விவரித்து சொன்னபோது (அப் 11அதி), "ஆதியிலே" என்ற வார்த்தையை பயன்படுத்தியுள்ளார் (வ.15) அதாவது, "எருசலேமில்" நடந்தது போலவே என்று குறிப்பிட்டுள்ளதை கிறிஸ்தவத்தோடும், கிறிஸ்தவர்களோடும் சம்பந்தப்பட்ட அநேக காரியங்கள் எருசலேமில் ஆரம்பமானவை தான்.

இயேசுக்கிறிஸ்து 12 சீஷர்களை **எருசலேமில்** காத்திருங்கள் என்று தான் கட்டளையிட்டார். **எருசலேமில்தான் முதல் சுவிசேஷப் பிரசங்கம்** பேதுருவால் செய்யப்பட்டது. **எருசலேமிலிருந்து தான் "இரட்சிப்பின் திட்டம்"** வெளியானது **எருசலேமில் தான் முதன் முதலாக "இயேசுவின் நாமத்தில்"** ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. **எருசலேமில் தான் "சுவிசேஷத்திற்கு மக்கள் முதன் முதலாகக் கீழ்ப்படிந்தார்கள்" எருசலேமில் தான், "கிறிஸ்துவின் சபை"** ஆரம்பமாயிற்று. **"முதல் ஆராதனை" எருசலேமில் தான்** நடைபெற்றது. வாரந்தோறும் கடைப்பிடிக்க வேண்டிய **"கர்த்தரின் பந்தி" எருசலேமில்தான்** தொடங்கியது. மொத்ததில், புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கான தேவச்சித்தம் முழுமையாக எருசலேமில்தான் வெளிப்பட்டது.

அப்போஸ்தலர் - 2 - ன்படி இவ்வளவு காரியங்கள் எருசலேமில் நடந்துள்ளபடியால், சுவிசேஷத்தை நாம் "எருசலேம் சுவிசேஷம்" என்று சொன்னாலும் தவறில்லை என்றே எண்ணுகிறேன். எருசலேம் சுவிசேஷம் என்பது கண்டிப்பாக வேறொரு சுவிசேஷம் அல்ல. ஏதோ, இது புதிது என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும், பவுலும் பிரசங்கித்த அதே சுவிசேஷம் தான்.

ஆனால், அருமையானவர்களே இன்றைக்கு இந்த சுவிசேஷம் ஜனங்களுக்குப் பிரசங்கிக்கப்படுகிறதா? பேதுருவினால் பெந்தெகொஸ்தே நாளில் பிரசங்கிக்கப்பட்ட இரட்சிப்பின் மாதிரி இன்று ஜனங்களுக்குக்

கொடுக்கப்படுகிறதா? எருசலேம் சுவிசேஷத்தின்படியாக ஒருவன் சபைக்குள் வருகிறானா? அதே மாதிரியின்பட்டியாக ஒருவன் இன்று தேவனை ஆராதிக்கிறானா? ஆராதனையின் ஒவ்வொரு பங்கும் எருசலேம் சுவிசேஷத்தின் மாதிரியின்படி உள்ளதா? "எந்த மாதிரி" இன்றைய கிறிஸ்துவச் சமுதாயத்தால் பின்பற்றப்படுகிறது? வருந்தத்தக்க காரியமென்னவென்றால், மிகப்பெரும்பான்மையான கிறிஸ்தவ சமுதாயம், எருசலேம் சுவிசேஷத்தின் மாதிரியைக் கடைபிடிப்பதுமில்லை. அதன்படி வாழ்வதுமில்லை. நீங்கள் எருசலேம் சுவிசேஷத்தின் மாதிரியின்படியாக வாழாவிட்டால் அது அழிவுக்குத்தான் வழிவகுக்கும் என்பதை நீங்கள் மறந்துவிட வேண்டாம்.

## II யெரொபெயாமும், கிறிஸ்தவமதத் தலைவர்களும்:

இரண்டாவதாக, கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பும் அநேகர், ஏன் எருசலேம் சுவிசேஷத்தை பின்பற்றுவதில்லையென்ற, இந்த இரகசியம் உங்களுக்கு விளங்குகிறதா? விளங்காவிட்டால் கவனியுங்கள். அன்றைக்கு வடக்கு ராஜ்யமாகிய இஸ்ரவேல் ஜனங்கள் ஆவிக்குரிய ரீதியில் பாழ்பட்டுப் போக ஒரே ஒரு யெரொபெயாம் தான் இருந்தான், ஆனால், இன்றோ கிறிஸ்துவை நேசிக்கும் மக்கள் தங்கள் ஆன்ம வாழ்வில் மரித்துப் போக நாடுகள் தோறும், பட்டணங்கள் தோறும் ஏராளமான கிறிஸ்தவ மதத் தலைவர்கள் உள்ளனர். இவர்களின் அட்டகாசம் போதாதென்று, ஊர் தோறும், ஏன் வீதிகள் தோறும் பொய்ப் போதகர்களும் மலிந்து கிடக்கின்றனர். எப்படி, அந்த ராஜா தன்னுடைய சொந்த லாபத்திற்காக ஜனங்களை எருசலேம் போகவிடாமல் தடுத்து, பொய் மார்க்கத்தை ஏற்படுத்தினானோ, அதைப்போலவே ஏராளமாயிருக்கிற யெரொபெயாம்கள் ஜனங்கள் பேசி, **"எருசலேம் சபைக்குப்"** பதிலாக **"பொய்ச்சபைகளையும்"** பொய் உபதேசங்களையும்" ஏற்படுத்தி வைத்துள்ளனர். அழிந்து போன, அந்த யெரொபெயாமாகிலும் ஒரு எருசலேமுக்குப் பதிலாக, இரண்டு எருசலேம்களைத்தான் உண்டு பண்ணினான். ஆனால், இந்தப் போலி கிறிஸ்தவ மதத்தலைவர்களும், கள்ளப்போதகர்களும், ஒரு எருசலேம் சபைக்குப் பதிலாக ஏராளமான பொய்ச் சபைகளை உருவாக்கி வைத்துள்ளனர். கிட்டத்தட்ட 3,000 பிரிவுச் சபைகள் இருப்பதாக புள்ளிவிபரம் கூறுகிறது.

எப்படி அந்த இஸ்ரவேலர், தங்கள் ராஜாவுடைய வஞ்சக வார்த்தைகளை நம்பி, அவனுடைய கபட நாடகத்தை அறியாமல், அவனுடைய பொய் மார்க்கத்தின் உண்மை நோக்கத்தை புரிந்து கொள்ளாமல், அதிலே தங்களை ஈடுபடுத்தி, ஒரு பொய்ப்பக்தியினடிப்படையில், பொய் சமாதானத்தைத் தேடிக்கொண்டார்களோ அதைப் போலவே, இன்றைய கிறிஸ்தவ சமுதாயமும், தங்கள் சொந்த இலாபத்திற்கென்றே சகலவற்றையும் செய்யும் இந்த போலி மதத்தலைவர்கள் பின்னும், வரம்பெற்ற ஊழியர்களென்று தங்களைத் தாங்களே அழைத்துக்கொள்ளும் சில வேடதாரிகள் பின்னும் சத்தியத்திற்கும், அசத்தியத்திற்கும் வேறுபாடு தெரியாத அப்பாவிபோதகர்கள் பின்னும் சென்று

அவர்களின் விஷமத்தனமான உபதேசத்திற்கு தங்களை ஒப்புகொடுத்து பக்திப ரவசம் பூண்டு, இயேசுக்கிறிஸ்துவால் கடுமையாக சாடப்பட்டான் பரிசேயர்களைப் போல் தங்களை ஒரு பெரிய பக்தி மான்கள் என்று நினைத்து வாழ்ந்து கொண்டு உள்ளது.

எப்படி இஸ்ரவேல் ஜனங்கள், "**எருசலேமுக்குப் போவது வருத்தம்**" என்ற ராஜாவின் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு, எருசலேமுக்குப் போவதை சுத்தமாக புறக்கணித்தார்களோ, அதைப்போலவே, இன்றைய கிறிஸ்தவ சமுதாயமும் தங்கள் மத தலைவர்களின் தந்திரப்பேச்சுக்கும் பொய் போதகர்களின் புளுகுக்கும் ஆவி என்ற பெயரில் முதலீடில்லா வியாபாரம் செய்யும் அற்புத வியாபாரிக ளின் வசீகரப்பேச்சுக்கும் அடிமைப்பட்டு எருசலேம் சுவிசேஷமாகிய உண்மைச் சுவிசேஷத்தை ஒதுக்கி ஓரம்கட்டிவிட்டனர். ஆகவே, அன்றைக்கு இஸ்ரவேலருக்கு எருசலேமுக்குப் போவது எப்படி வருத்தமான காரியமாக இருந்ததோ அதைப் போலவே இன்று, எருசலேம் சுவிசேஷத்தைப் பின்பற்றுவதும், வருத்தமான காரியமாக வே இவர்களுக்கு உள்ளது.

## III பொய் சபைகளும் , தாணும்-பெத்தேலும்:

இறுதியாக, தேவனால் கொடுக்கப்பட்ட, மாட்சிமை பொருந்திய எருசலேமுக்கு மாற்றாக எப்படி தாணும், பெத்தேலும் இருந்ததோ, அதைப் போலவே இயேசுக்கிறிஸ்துவால் இரத்தம் சிந்தி சம் பாதிக்கப்பட்ட அவருடைய மகிமை பொருந்திய சபைக்கு (எபே5: 27) மாற்றாக, சபை என்ற பெயரால் ஏராளமான தாண்களும், பெத்தேல்களும் உள்ளன. அவைகளில், உலகெங்கும் வியாபித்திருக்கி ற ஒரு அமைப்பு, சபை என்ற பெயரால் "அரசாட்சி" செய்து கொண்டுள்ளது. அதிலிருந்து பிரிந்தவை, அரசாட்சியோடு மருந்துக்கு கொஞ்சம் அருளாட்சியையும் சேர்த்து காரியமாற்றிக்கொண்டுள்ளது. அய்யோ! இவைகளின் ஆட்டம் பொறுக்க முடியவில்லையே, இதிலிருந்து விடுதலை கிடைக்காதா என்று கிறிஸ்தவம் ஏங்கி கிடந்த வேளையில், விநோத கூட்டம் ஒன்று புற்றீசல் போல் எழும்பி வந்து , வாயிலே நுழையாத ஏராளமான பெயர்களைத் தங்களுக்குத் தரித்துக் கொண்டு, ஆவி என்ற பெயரால் பேயாட்டம் போட்டு, தேவனை உண்மையாய் நேசிக்கும் ஜனங்களை வெகுவாக மோசம் போக்கிக்கொண்டுள்ளது. நான் இப்படி கடுமையாக எழுதுவதற் கு, என்னை மன்னிக்கும்படி தயவாய் கேட்டுக் கொள்கிறேன்.

இதை வாசிக்கும் அருமை நண்பரே! கொஞ்சம் நாம் சிந்தித்துப் பார்ப்போம் அன்று, இஸ்ரவேலருக்கு எருசலேமைக்காட்டிலும் த ாணும், பெத்தேலும் சமீபத்திலிருந்தது. சந்தேகமில்லை, எருசலேமுக்குப் போவதைக் காட்டிலும் தாணுக்கும், பெத்தேலுக் கும் போவது சுலபமாக இருந்தது. சந்தேகமில்லை எருசலேமின் மாதிரியின்படியே பண்டிகைகள் உட்பட அனைத்தும் தாணிலும் பெத் தேலிலும் கிடைத்தது. அதிலும் சந்தேகமில்லை. எருசலேமுக்குப் போனால் கிடைக்கும் மனசமாதானமும் தாணிலும், பெத்தேலிலும், கிடைக்கிற மாதிரி இருந்தது. இதிலும் சந்தேகமி ல்லை . ஆனால், முடிவு?

அன்பான தேவப்பிள்ளையே! தயவு செய்து கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். உங்கள் நிலையை சீர்தூக்கிப் பாருங்கள். உங்களை நீங்கள் தற்பரிசோதனை செய்து பாருங்கள். எனக்கும் எருசலேம் சுவிசேஷத்திற்குமுள்ள இடைவெளி எவ்வளவு என்று பாருங்கள். நீங்கள் எருசலேமுக்குப் போக விரும்பும்போது நீங்கள் அங்கே போக முடியாதபடி தடைகள் வரும். எப்படி இஸ்ரவேலில், தேவனுடைய பிரமாணங்களை அறிந்த ஆசாரியர்கள் துரத்தப்பட்டு. ஈனமானவர்கள் ஆசாரியர்களாக நியமிக்கப்பட்டு ஜனங்களை பொய்மார்க்த்தில் வழி நடத்தினார்களோ அதைப்போல, நீங்கள் இருக்கும் இடத்தில், புதிய ஏற்பாட்டு உபதேசத்தை முழுமையாக அறியாதவர்கள் உங்களுக்கு ஊழியர்களாக இருந்து உங்களை வழி நடத்தக் கூடும். அவர்கள் ஒரு போதும் நீங்கள் எருசலேம் சுவிசேஷத்தைப் பார்க்க அனுமதிக்கமாட்டார்கள். எப்படி இஸ்ரவேலின் ஆசாரியர்கள், இஸ்ரவேலின் ராஜாவுடைய கட்டளையை ஏற்று பொய்மார்க்கத்தில் ஜனங்களை வழிநடத்தினார்களோ, அது போலவே இந்த ஊழியர்கள் தங்கள் மதத் தலைவர்களின் கட்டளைக்குப் பயந்து உங்களைப் பொய்ச் சுவிசேஷத்தில் வழி நடத்திக் கொண்டிருக்கக் கூடும்.

ஆனால், அடுத்தவர்கள் மீது பழியைப்போட்டு, நாம் நியாயத்தீர்ப்பில் தப்பித்துக்கொள்ளமுடியாது என்பது உங்களுக்கு நினைவில் இருக்கட்டும். ஆம்! வழிநடத்தினவர்கள் மீதோ! மதத்தலைவர்கள் மீதோ பழிசுமத்தி நாம் தண்டனையிலிருந்து விலகிக் கொள்ள முடியாது. “தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவன்க்குப் பலனளிப்பார்” என்று வசனம் கூறுகிறது. (ரோமர் 2:6)

ஆகவே, அன்பானவர்களே, நீங்கள் ஒவ்வொருவரும் எருசலேம் சுவிசேஷத்தை அறியும் வாய்ப்பையும் அதன் மூலம் இயேசுக் கிறிஸ்து கட்டின ஒரே சபையாகிய **கிறிஸ்துவின் சபையைத்** (மத் 16:18) தெரிந்து கொள்ளும் சந்தர்பத்தையும் அந்த ஒரு சபைக்கு (எபே 4:4) உங்களைக் கீழ்படுத்தும் பாக்கியத்தையும் இந்தப் பூமியின் வாழ்க்கையில் பெற்றுக் கொள்வீர்களாக! ஒருவேளை, எருசலேம் சுவிசேஷத்தைக் கண்டுபிடித்து, அதற்குக் கீழ்ப்படிவது உங்களுக்கு வெகு வருத்தமாக இருந்தால், இஸ்ரவேலருக்கு கி.மு. 722-உடன் யெகோவாவோடு இருந்த உறவு அறவே அற்றுப் போனது போல, உங்களுக்கும் நீயாயத்தீர்ப்புடன் பரலோகத்தின் தேவனோடு உள்ள உறவு முற்றிலும் மறைந்து போகும், ஆம்,மறைந்தே போகும்.

**–S. ராஜநாயகம்.**

# ஞானஸ்நானம் கொடுப்பது எப்படி?

"நீங்கள் இருக்கும் இடத்தில் கிறிஸ்துவின் சபையைத் தொடங்குவது எப்படி" என்ற பாடம் தொடர்கிறது. நீங்கள் இருக்குமிடத்தில் சபை இல்லாதிருக்குமானால், அங்கு சபை தொடங்கும்படி உங்களை உற்சாகப்படுத்துகிறோம். இப்பணியில் உங்களுக்கு உதவி செய்ய விரும்புகிறோம். ஒருவேளை, நீங்கள் சபையின் அங்கத்தினராக இல்லாதபட்சத்தில், நீங்கள் அங்கத்தினராகும்படி, முதலில் கர்த்தருக்குக் கீழ்ப்படியவேண்டும். அப்பொழுதுதான், ஒரு பிராந்திய சபையை துவங்கும் முயற்சியில் நீங்கள் ஈடுபடமுடியும்.

இப்பணியில் சம்பந்தப்பட்டுள்ள எல்லா காரியங்களையும் கவனிக்கும் படியாய், இப்பொழுது ஞானஸ்நானத்திற்கு வருகிறோம். குறிப்பாக "எப்படி ஞானஸ்நானம் கொடுப்பது" என்று பார்ப்போம்.

முதலில் ஞானஸ்நானம் என்பதின் வேதாகமப் பொருள் என்னவென்றும் அதன் நோக்கம் என்ன என்பதையும் வலியுறுத்த விரும்புகிறோம். ஞானஸ்நானமென்பது தண்ணீரைக் கொண்டு செய்யப்படும் **அடக்கம்** அல்லது **முழுகுதல்** ஆகும். பவுலடியார் சொல்லும்போது, "ஞானஸ்நானத்தினாலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" என்கிறார். (கொலோ 2:12) வேறொரு சந்தர்ப்பத்தில், கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (ரோம 6:3,4) யோவானிடத்தில் கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபோது, **"தண்ணீரிலிருந்து கரையேறினார்"** என்று வேதாகமம் கூறுகிறது.

இன்னும் அப்போஸ்தலர் 8-ம் அதிகாரத்தில், பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு இரதத்தில் போதித்துக் கொண்டிருக்கையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி, பிலிப்புவை நோக்கி, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறலாமா என்று கேட்டான். அதற்கு, பிலிப்பு, **"நீர் முழு இருதயத்தோடு விசுவாசித்தால் தடையேதுமில்லை"** என்றான். அப்பொழுது, அந்த

மந்திரி, கிறிஸ்துவை, தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து, தாங்கள் பயணம் செய்த இரதத்தை நிறுத்தச் சொல்லி இருவரும் தண்ணீருக்குள் இறங்கினார்கள். பின்பு பிலிப்பு, மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். இருவரும் கரையேறினார்கள். ஏன் இருவரும் தண்ணீருக்குள்ளாகச் செல்ல வேண்டும்? அப்பொழுது தான், ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறேன் என்று வேண்டிக்கொண்டவனை, தண்ணீருக்குள் முழுக்க முடிந்தது. ஞானஸ்நானத்திற்காக இருவரும் தண்ணீருக்குள் சென்றபடியால், அக்காரியம் முடிந்தவுடன், மந்திரியும், பிலிப்பும் தண்ணீரை விட்டு கரையேறினார்கள். ஆகையால், ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் முழுகுதல் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது.

அடுத்து, ஞானஸ்நானம் பாவமன்னிப்புக்கென்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். இங்கே நாம், ஞானஸ்நானம் மாத்திரம் நம்மை இரட்சிக்கிறதென்று சொல்லவில்லை. ஆனால், ஒருவன் சத்தியத்தைக் கேட்டு, தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, பாவத்திலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெறும்பொழுது, அது நம்மை பாவத்திலிருந்து விடுவித்து, இரட்சிக்கிறது. இயேசு அப்போஸ்தலர்களுக்கு, "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்று கட்டளையிட்டார். அவர்கள் அப்படிச் செய்கையில், "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்"(மாற் 16:16) என்று போதித்தார்கள்.

பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும் எருசலேம் பட்டணத்தில், திரளான ஜனங்களுக்குப் போதித்த போது, நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று அவர்கள் கேட்டபொழுது, பேதுரு அவர்களை நோக்கி, **"நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்றான்** (அப் 2:38) ஞானஸ்நானம் ஒருவனை கிறிஸ்துவுக்குள்ளும் சபைக்குள்ளும், உட்படுத்துகிறது. இக்கருத்தை நாம் கலாத்தியர் 3:26,27 வசனங்களில் காணலாம் "நீங்களெல்லாரும், கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" என்றார்.

இறுதியாக, ஞானஸ்நானத்தில் ஒருவன், **கிறிஸ்துவின், மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல்** ஆகியவற்றை வெளிப்படுத்துகிறான். கிறிஸ்து சிலுவையில் மரித்தார். கர்த்தருக்குக் கீழ்ப்படிவதன் மூலம் ஒருவன் பாவத்தை விட்டுத்

திரும்புகிறான் அல்லது பாவத்துக்கு மரிக்கிறான். கிறிஸ்து கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார். கர்த்தருக்குக் கீழ்ப்படிகிற ஒருவன் ஞானஸ்நானத்தின் மூலம் தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்படுகிறான். கிறிஸ்து கல்லறையிலிருந்து மீண்டும் உயிர்த்தெழுந்தார். அதுபோல பரலோகத்திலிருக்கிற பிதாவுக்குக் கீழ்ப்படியும் போது, புதிதான ஜீவனுள்ளவர்களாய் வாழும்படி, தண்ணீராலான கல்லறையிலிருந்து எழுகிறான். இவையனைத்தையும் ரோமர் ஆறாம் அதிகாரத்தின் மூலம் தெரிந்து கொள்கிறோம். ஆகவே, ஒருவன் ஞானஸ்நானம் பெறும்பொழுது, கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை தன்னுடைய கீழ்ப்படிதலின் மூலமாய்த் தெரிவிக்கிறான். இது, மிக அழகான ஒரு காரியம்.

நீங்கள் இதைச் செய்திருப்பீர்களானால், நீங்கள் கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினராயிருக்கிறீர்கள். இந்தச் சத்தியத்தை உங்களைச் சுற்றியிருப்பவர்களுக்கும் போதிக்கத் தயாராயிருக்கிறீர்கள். இப்பொழுது, ஒருவர் ஞானஸ்நானம் பெற விரும்பினால், நீங்கள் என்ன செய்வீர்கள்? ஒருவேளை, அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்க உங்களைத் தவிர வேறு யாரும் இல்லையெனில், நீங்கள் தான் ஞானஸ்நானம் கொடுத்தாக வேண்டும். நீங்கள் அதை எப்படிச் செய்வீர்கள்? உண்மையில் அது ஒரு எளிதான காரியம் தான்.

முதலில், அவர் மூழ்கும் அளவுக்கு ஆழமான தண்ணீரைக் கண்டுபிடியுங்கள். அது ஒரு நதியாகவோ அல்லது ஓடையாகவோ அல்லது ஏரியாகவோ அல்லது தண்ணீர் நிறைந்த ஒரு இடமாகவோ இருக்கலாம். நீங்கள் ஒரு கடலருகே வாழ்பவராக இருந்தால் நீங்கள் எப்பொழுதும் அங்கேயே ஞானஸ்நானம் தரலாம். ஞானஸ்நானம் கொடுப்பதற்கு ஒரு நேரத்தைக் குறிப்பிடுங்கள். எங்கே தண்ணீர் இருக்கிறதோ, அங்கே ஞானஸ்நானம் பெறுபவரை வரவழையுங்கள் ஞானஸ்நானம் எடுக்கும் போது அணிந்து கொள்வதற்கு ஒரு உடையும், எடுத்த பின்பு மாற்றிக் கொள்ள ஒரு உடையும், துடைக்க துண்டும் எடுத்து வரச் சொல்லுங்கள்.

ஞானஸ்நானம் அளிப்பவரும், தனக்கு துண்டும், மாற்றுடையும் எடுத்து வரலாம்.உங்கள் குடும்ப அங்கத்தினர்களோடும், நண்பர்களோடும், நீங்கள் ஞானஸ்நானத்திற்குக் கூடி வந்திருக்கும்போது, ஓரிரு பாடல்கள் பாடலாம். வேதாகமத்திலிருந்து ஒரு பகுதியை வாசிக்க விரும்பினால், எத்தியோப்பிய மந்திரி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட சம்பவத்தை, (அப் 8:26-29) வாசிக்கலாம். அதில் கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசம் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அந்தப் பகுதி வாசிக்கப்பட்டவுடன், ஞானஸ்நானம் பெறுபவரிடம் நீங்கள், இயேசுக் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறீர்களா என்ற கேள்வியைக் கேட்கலாம். அவர்கள் விசுவாசித்தால், "நாங்கள்

இயேசுக்கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறோம் என்பார்கள்.

அவர்கள் செய்த அறிக்கையின் பேரில், அந்த நபரை தண்ணீருக்குள் அடக்கம் செய்யும் அளவுக்கு எங்கே தண்ணீர் இருக்கிறதோ அப்பகுதிக்கு அந்நபரை தண்ணீருக்குள் அழைத்துச் செல்ல வேண்டும். ஞானஸ்நானம் கொடுப்பதற்கு முன்பாக, நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிய விரும்புவதினாலும், இயேசுக்கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று நீங்கள் செய்த விசுவாச அறிக்கையின் பேரிலும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து கொடுத்த அதிகாரத்தின் பேரிலும், பாவ மன்னிப்புக்கென்று, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே, நான் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன் என்று கூற வேண்டும். இவ்வசனப் பகுதியை நீங்கள் மத் 28:18-20 ல் வாசிக்கலாம்.

ஞானஸ்நானம் பெறப்போகிறவரின் இரு கைகளையும் எடுத்து, ஒன்றோடொன்று சேர்த்து, தண்ணீருக்குள் போகும்போது அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று அவர்களுக்கு விவரித்து, பயமேதுமில்லையென்று சொல்லவேண்டும். அதே சமயத்தில், அவர்கள் முதுகில் உங்கள் கைகளை வைத்து தண்ணீருக்குள் அவர்கள் முழுமையாக அடக்கம் செய்ய அவர்களை தண்ணீருக்குள் மெதுவாக சாய்க்க வேண்டும். முற்றும் முழுகின பின்பு, அந்த நபரை உடனே தண்ணீரிலிருந்து வெளிக்கொண்டு வரவேண்டும். இவைகள் தான் நீங்கள் செய்ய வேண்டியவை. இவையாவும் செய்வதற்கு எளிதானவை பயப்பட ஒன்றுமேயில்லை. ஏனென்றால், தண்ணீரின் ஆழம் மிகுந்த இடத்திற்குச் செல்வதில்லை. அதற்கான ஒட்டுமொத்த நேரமே ஒரு சில வினாடிகள் தான்.

நான் இந்த விதமாகக் கொடுக்க விரும்புவேன். அந்த நபரை தலைமாத்திரம் தெரியும்படி தண்ணீருக்குள் முழங்காலிடச் செய்து, தலையை மாத்திரம் தண்ணீருக்குள் சாய்ப்பேன். இப்படிச் செய்யும் பொழுது அந்த நபரின் எடையை நாம் முன்னும், பின்னும் தாங்கத் தேவையில்லை. முக்கியமான காரியம் அந்த மனிதன் முழுக வேண்டுமென்பது. அதைச் செய்தவுடன், கர்த்தர் தனக்கு என்ன கட்டளையிட்டாரோ அதைச் செய்து முடித்துவிட்டார். அதன் மூலம் அவரோ அல்லது அவளோ கர்த்தரின் ஞானஸ்நானக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தாயிற்று.

பாடல் புத்தகம் அங்கே கொண்டு வரப்பட்டிருந்தால், ஞானஸ்நானம் முடிந்தவுடன் ஒன்றிரண்டு பாடல்களைப் பாடலாம். ஞானஸ்நானம் பெற்றவர் ஒரு ஆணாக இருந்தால், வழக்கமாக, அந்தப் புதிய கிறிஸ்தவரை நான் ஜெபத்தில் வழிநடத்தக் கேட்பேன். கிறிஸ்தவனாக மாறியவர் அவர், தேவனுடைய குடும்பத்தில் பிறந்த ஒரு குழந்தை என்ற அந்தஸ்தோடு, தேவனுக்கு நன்றி சொல்லி ஜெபிக்கிற ஜெபம் கேட்பதற்கு எவ்வளவு அருமையாய் இருக்கும்.

ஞானஸ்நானத்தின் மூலம் கர்த்தருக்கு கீழ்ப்படிந்தவுடன் சிலர் ஜெபித்த அருமையான சில ஜெபங்களை நான் கேட்டிருக்கிறேன்.

இப்பொழுது அந்த நபர் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறபடியால், கர்த்தர் அவரை தம்முடைய சபையில் சேர்த்திருக்கிறார். உங்கள் பகுதியில், ஏற்கெனவே நீங்கள் கிறிஸ்தவராக இருக்கிறபடியாலும், இப்பொழுது அவர் கிறிஸ்தவராக மாறியிருப்பதாலும், உங்கள் பகுதியில் கர்த்தருடைய சபையை ஏற்படுத்த இருவரோ அல்லது அதற்கு அதிகமானோரோ இருக்கிறீர்கள். மற்றவர்களுக்கும் சுவிசேஷம் போதிக்கப்படும்போது ஞானஸ்நானமானது பல முறை திரும்பத் திரும்ப நடக்கும். தொடர்ந்து நடைபெறும்.

தெளித்தலும், தலையின் மேல் தண்ணீர் ஊற்றுதலும், வேறு எந்த வகையான ஞானஸ்நானமும், வேதாகமத்தின் அடிப்படையிலான ஞானஸ்நானமல்ல என்பது உங்களுக்கு இப்பொழுது புரிந்திருக்கும்.

நீங்கள் ஞானஸ்நானத்தின் மூலம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து விட்டீர்களா? இல்லையெனில், நீங்கள் ஞானஸ்நானம் பெற நாங்கள் ஜெபிக்கிறோம். இவை சம்பந்தமாக நாங்கள் உங்களுக்கு உதவத் தயாராக இருக்கிறோம்.

**J.C. சோட்**

# உங்கள் கவனத்திற்கு . . .

"**திருமறை ஆசான்**" மாத இதழ், தற்போது மாதம் 4000 பிரதிகளாக வெளிவருவது உங்களுக்குத் தெரிந்ததே. கர்த்தருக்குச் சித்தமானால், எதிர்வரும் ஜனவரி, 1999-ல் இருந்து இதன் எண்ணிக்கை மாதம் 5000 பிரதிகளாக உயர உள்ளது.

ஆகவே, "**திருமறை ஆசான்**" இதழைப் பெற்று, உண்மையாகவே பயன்படுத்த விரும்பும் தனிப்பட்டவர்களும், ஊழியர்களும், தேவையான பிரதிகளுக்கு, உங்களது தெளிவான முகவரியுடன் எங்களுக்கு எழுதுங்கள்.

நன்றி

**- ஆசிரியர்**

பெண்கள் பகுதி

# பெண்களும், ஊழியமும்

"பெண்கள் விடுதலை இயக்கம்" ஆரம்பிக்கப்பட்டதற்குப் பிறகு பெண்களை, ஆண்களுக்கு மேலான இடத்தில் வைக்க வேண்டுமென்பதற்கான முயற்சிகள் மேலும் மேலும் எடுக்கப்பட்டு வருகின்றன. பல பிரிவினைச் சபைகள், பெண்களை தங்கள் சபைகளில் பிரசங்கிகளாகவும், மூப்பர்களாகவும், சபைப் பொறுப்பாளர்களாகவும் நியமிக்கும் பணியை துவக்கிவிட்டன. பிரிவினைச் சபைகள் பெண்களை தலைமைப் பொறுப்பில் வைப்பது ஆச்சரியமான ஒன்றல்ல. ஏனெனில், அவர்கள் தேவனுடைய வார்த்தைகளின் அதிகாரத்தை மதிப்பதில்லை. அவர்கள் எப்படியோ இருக்கட்டும், வேதனை தரக்கூடிய விஷயம் என்னவென்றால், கர்த்தருடைய சபையிலும் சில அங்கத்தினர்கள், பெண்கள் பிரசங்கிகளாகவும், மூப்பர்களாகவும், மற்றும் வழிநடத்துபவர்களாகவும் வரவேண்டுமென்று விரும்புகிறார்கள்.

சபையில் பெண்களுடைய பங்கு எப்படியிருக்க வேண்டுமென்பதற்கு, gÇRªj M Éahdt® Iதீமாத்தேயு 2-ம் அதிகாரத்தில் அறிவுரைகள் கொடுத்துள்ளார். ஆண்கள் ஜெபத்தில் வழிநடத்த வேண்டுமென்று கூறுகிறார் (வ.8) பெண்கள் தங்களை எப்படி உடுத்துக்கொள்ள வேண்டுமென்று அறிவுரை கூறுகிறார் (வ.9,10). அவள் "அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடே கற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறுகிறார்" (வ.11) மீண்டும், உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ்செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டுமென்று கூறுகிறார். ஏன், பெண்கள் மீது இப்படி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கிறதென்பதற்கான காரணத்தை 13 முதல் 15 வசனங்களில் விளக்கியுள்ளார்.

**"சபையாகக் கூடி வந்திருக்கும் போது பெண்களின் பங்கு"** எப்படியிருக்க வேண்டுமென்பதற்கான விளக்கம் I கொரி 14:23-35 வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. "சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்திரவில்லை, அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும், வேதமும் அப்படியே சொல்கிறது. இது, பரிசுத்த ஆவியானவர் தந்த அற்புதவரங்களை செயல்படுத்தும் விசேஷித்த நோக்கத்தோடு கூடிவந்த சந்தர்ப்பம். ஆனால், பெண்கள் ஆண்களுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்ற கொள்கையளவில், அதே கருத்துடையது தான்.

சபையில், ஆண்களுக்குப் பெண்கள் அடங்கியிருக்க வேண்டுமென்பது அவர்களுக்கு தரக்குறைவானதல்ல. அறிவிலும், திறமையிலும் அவர்கள் ஆண்களுக்குக் குறைவானவர்களென்று வேதம் எங்கும் சொல்வதில்லை. இது, தேவன் ஒழுங்குபடுத்தின ஒரு திட்டம், அவ்வளவே. தேவனுடைய வார்த்தையை மாற்றும் அதிகாரம் மனிதனுக்கு இல்லை. (உ.பா. 4:2,5:32,12:32, IIயோ 9-11, வெளி. 22:18,19)

Iகொரி. 11:3 இவ்விதம் சொல்கிறது: "ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்". பிதாவாகிய தேவனுக்கு கீழ்ப்படிந்திருப்பது குறித்து இயேசு அதிருப்தியடையாதது போல, சபையிலே ஆண்களுக்குப் பெண்கள் கீழ்ப்படிந்திருப்பது குறித்து கோபமோ, அதிருப்தியோ படக்கூடாது. புருஷன் கிறிஸ்துவுக்கும், கிறிஸ்து பிதாவாகிய தேவனுக்கும் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்பதை பெண்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்

அப்போஸ்தலன் பவுல் இன்றைக்கு இருந்தால், வேறுவிதமாக உபதேசிப்பார் என்று சிலர் வாதிடுகிறார்கள். ஆனால், பவுல் தன்னுடைய ஞானத்தைக் கொண்டு இவைகளைப் பேசவில்லையென்பதை நாம் அறிய வேண்டும். பரிசுத்த ஆவியானவர் ஏவின காரியங்களை மாத்திரமே எழுதினார். (Iகொரி 2:9-13,14,37) பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட தேவனுடைய வார்த்தைகள் எல்லாக் காலத்துக்கும் பொருந்தும்படியாகவே கொடுக்கப்பட்டுள்ளது. அவைகள் மாற்றப்படக்கூடாதது(சங்.119:89).

ஆண்கள் மீது, பெண்கள் அதிகாரஞ் செலுத்துவதற்கு ஆதாரமாக சிலர் பழைய ஏற்பாட்டுக்குச் செல்வார்கள். மோசேயின் சகோதரியாகிய மிரியாம் இதற்கு உதாரணமாக அடிக்கடி காட்டப்படுவாள். மிரியாம் ஒரு தீர்க்கதரிசி (யாத் 15:20,21) எப்படியிருந்தாலும், அவளுடைய வேலை இஸ்ரவேலின் பெண்களுக்குள் தான் இருந்தது. ஒரு சமயம் மோசேக்கு எதிராக மிரியாம் கலகம் பண்ணினாள். அவளுக்கு குஷ்டரோகம் வரப்பண்ணி, தேவன் அவளைத் தண்டித்தார் (எண் 12:1-12)

சில சமயங்களில், இஸ்ரவேலில் நியாயாதிபதியாகவும், தீர்க்கதரிசியாகவும் இருந்த தெபோராள், பெண்கள் ஆண்கள் மீது அதிகாரம் செலுத்துவதற்கு ஆதாரமாகக் காட்டப்படுகிறாள். இஸ்ரவேலில் அநேகர் தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருந்த காலகட்டத்தில் இது நடந்தது. அப்பொழுது தேவனுடைய ஜனங்களை நியாயந்தீர்க்க தகுதியான ஆண் இஸ்ரவேலில் இல்லை. கானானியருக்கு எதிரான யுத்தத்தில் தலைமையேற்று நடத்தும்படி தெபோராள்

பாராக்கை அழைத்தாள். அவன், நீ என்னோடேகூட வராவிட்டால் நான் போகமாட்டேன் என்றான் (நியா. 4:8) கானானியரை யுத்தத்தில் சந்திக்கும் தைரியம் ஒரு மனிதனுக்கும் இராதபடியால், தேவன், சிசெராவை ஒரு பெண்ணின் கையில் ஒப்புக்கொடுத்தார் (நியாயா.4:9,21)

நெகேமியா 6:4 நொவதியாள் என்னும் பெண் தீர்க்கதரிசியைக் குறிப்பிடுகிறது. தேவனுடைய ஜனங்களின் விரோதியாகிய சன்பல்லாத், தொபியா இவர்களால் கூலிக்கு அமர்த்தப்பட்டவள் தான் இவள். IIராஜா 22-ல் உல்தாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி குறிப்பிடப்பட்டுள்ளாள், ஆனால் அவள் யாரையும் ஆளவில்லை. தேவனுடைய ஜனங்கள் மீது யோசியா என்ற ராஜா ஆளுகை செய்தான். ராஜா தன்னுடைய ஆலோசகர்களை அவளிடத்தில் தனியே பேசும்படி அனுப்பினார். (II ராஜா 22:14-20)

தேவனுடைய ஜனங்களின் முழுச் சரித்திரத்தையும் கவனித்துப் பார்த்தால், ராஜாக்கள், ஆசாரியர்கள், தீர்க்கதரிசிகள், வேதபாரகர்கள், மூப்பர் என்று இப்படி எல்லோருமே ஆண்கள்தான். தெபோராள், உல்தாள் என்ற இந்த இருவர் மாத்திரமே இதற்கு விதிவிலக்கு. இன்றைக்கு கர்த்தருடைய சபையில் பெண்கள் போதகர்களாகவும், மூப்பர்களாகவும் இருப்பதற்கு, பழைய ஏற்பாட்டிலிருந்து எந்த ஒரு ஆதாரத்தையும் தர முடியாது. ஆசரிப்புக் கூடாரமும், தேவாலயமும், சபையின் மாதிரியாக உள்ளது. எந்தவொரு பெண்ணும் ஆசரிப்புக் கூடாரத்திலும், தேவாலயத்திலும் ஆசரியர்களாக இருக்கும்படி அனுமதிக்கப்படவில்லை. ஆகையால், எந்தவொரு பெண்ணும், கர்த்தருடைய சபையிலே, ஆராதனையிலே தலைமையேற்றுச் செய்பவர்களாக இருக்கமுடியாது.

**Roy J. Hearn.** — **தமிழில் : R.R. நாயகம்**

## இரட்சிப்பின் படிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கேள்விப்படுதல் | - | ரோம. 10 : 17, லூக். 8 : 18 |
| 2. | விசுவாசித்தல் | - | மாற். 16 :16, அப். 8:37 |
| 3. | மனந்திரும்புதல் | - | அப். 2:38, அப். 3 : 20 |
| 4. | அறிக்கையிடுதல் | - | மத். 10 : 32, ரோம. 10 : 10 |
| 5. | ஞானஸ்நானம் | - | அப். 2 : 38, அப். 22 : 16. |

# தேவத்துவம்

தேவத்துவம் என்பதின் பொருள், புரிந்து கொள்வதற்கு மிகவும் கடினமான காரியங்களில் ஒன்றாக எல்லோருக்குமே உள்ளது. வேதாகமம் ஒரே தேவன் என்று போதிக்கிறது (உபா. 6:4;ஏசா.44:6,45:5,6; Iகொரி 8:6) இன்னும்,வேதாகமம் பிதாவை தேவன் என்றும், குமாரனையும் தேவன் என்றும், பரிசுத்த ஆவியையும் தேவன் என்றும் குறிப்பிடுகிறது (எபே.1:3, எபி 1:8; அப். 5:3,4)

தேவத்துவம் என்ற வார்த்தை தமிழ் வேதாகமத்தில் இரண்டு பகுதிகளில் இடம் பெற்றிருக்கிறது. (ரோம. 1:20; கொலோ.2:9) பண்மைப் பொருளைக் குறிக்கும் "நாம்" என்ற வார்த்தை, தேவனைக் குறிக்கும்படியாக பழைய ஏற்பாட்டின் சில இடங்களில் உள்ளது. (ஆதி 1:26,27; 3:22; 11:7;ஏசா 6:8). புதிய ஏற்பாட்டில், பிதா, குமாரன் பரிசுத்த ஆவி ஆகிய மூவரையும் ஒரே பகுதியில் குறிப்பிடும் வசன பகுதிகள் உண்டு. (மத்.3:16,17;28:,19,20; IIகொரி 13:14;Iபேது.1:2)

தெய்வீகத் தன்மை ஒன்று தான். ஆனால், மூன்று வேறுபட்ட நபர்கள் அத்தன்மை உடையவர்களாயுள்ளனர். "தேவன்" என்ற வார்த்தை பிதாவை மாத்திரம் தனியாக குறிக்கும்படியாக பயன்படுத்தினாலும், (பிலி.1:2, கொலோ.1;3), இப்பதம், தேவத்துவத்துள் உள்ள மூவரையும் குறிக்கும்படியாக ஒட்டுமொத்த பெயராக, ஒரு குடும்பப் பெயராக அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது என்று டால்டன் கீ என்பவர் எழுதியுள்ளார்.

எப்படி கணவனும், மனைவியும் தனித்தனி ஆள் தத்துவமுடையவர்களா யிருந்தும், தங்களுடைய நோக்கம், ஆசை, ஒற்றுமை, குறிக்கோள் இவைகளில் ஒன்றாக இருக்கிறார்களோ(ஆதி 2:24, மத் 19:5), அதைப் போலவே "தேவத்துவம்" என்பதும் பரலோகத்திலுள்ள தேவனுடைய ஒரே தெய்வீகக் குடும்பமாயிருந்தாலும், மூன்று தனித்தனி தெய்வீகத் தன்மையை உள்ளடக்கியதாயிருக்கிறது.

பிதா தேவனாயிருக்கிறார். (எபே. 1:3) குமாரன் தேவனாயிருக்கிறார் (எபி 1:8) பரிசுத்த ஆவியானவர் தேவனாயிருக்கிறார்.(அப் 5:3,4) பிதாவும்,குமாரனும் ஒருவரல்ல என்று பல வேத வசனங்கள் நமக்குக் காட்டுகிறது (யோவா 8:16-18,மாற் 13:32;அப் 2:33,36,7:55) ஆயினும்,பிதாவும்,குமாரனும் உபதேசத்தில் ஒன்றாயிருக்கிறார்கள்(IIயோவா 9) பாதுகாப்பிலும் (யோவா 10:27-30) வார்த்தையிலும்,கிரியையிலும், (யோவா 14:8-11)நோக்கத்திலும் (யோவா 14:16-28), கிருபையிலும், பரிபூரணத்திலும்(கொலோ 2:8-10) ஒன்றாயிருக்கிறார்கள். ஆனால்,

அவர்கள் ஒரே நபராக இல்லை.

இயேசுக்கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவரை ஒரு நபர் என்று சொல்கிறார். (யோவா 16:7-16) அவரால் போதிக்கவும், அறிவுறுத்தவும், சாட்சியிடவும் முடியும், அவரிடத்தில் பொய் சொல்லவும் முடியும், (அப் 5:3,4) அது மாத்திரமல்ல, அவரால் ஊழியத்திற்கு மனிதர்களை ஏற்படுத்தவும் முடியும்(அப் 13:2) இவைகள் அனைத்தும் ஒரு நபருக்குண்டான இயல்புகள்.

பரிசுத்த ஆவியானவர் செய்வதற்கென்று வேலைகள் இருந்தது. பழைய ஏற்பட்டு தீர்க்கதரிசிகள் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் பேசினார்கள்.(II பேதுரு 1:20,21). புதிய ஏற்பாட்டில், பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தை வெளிப்படுத்தி உறுதிப்படுத்தியுள்ளார். (மாற் 16:20;எபி.2:3,4; யூதா 3) என்ன பேசவேண்டுமென்று அப்போஸ்தலர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார் (மத் 10:19,20;யோவா 14:26;16:13).

பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூவரும் தேவத்துவத்துள் உள்ள மூன்று நபர்கள் (யோவா 1:1-3,14) இயேசு, இம்மானுவேலாயிருந்தார். அதன் பொருள் " **தேவன் நம்மோடிருக்கிறார்**" என்பது (ஏசா 7:14,மத் 1:22,23) இயேசு தேவனாயிருந்தார். தெய்வீகத்திலுள்ள மூவரில் ஒருவராயிருக்கிறார்.

ஒரே தேவன் தான் இருக்கிறார். அந்த தேவன், பிதா,குமாரன்,பரிசுத்த ஆவி என்று மூன்று நபர்களில் வெளிப்பட்டுள்ளார். "தேவன்" என்பது ஒரு குடும்பப் பெயர்.

**– JOHN GRUBB.**


## உங்களுக்கு உதவுகிறோம்

## திருமதி. எப்ஸி சாலமோன் நினைவு இருதய அறக்கட்டளை

**29-A,** குமரன் நகர், ஜவகர் நகர் அஞ்சல், சென்னை - 600 082.

இருதய வியாதியில் துயருரும் மக்களுக்காக, மருத்துவ உதவி செய்ய ஏற்படுத்தப்பட்டது தான் இந்த அறக்கட்டளை.

ஆகவே, இருதய வியாதியில் அல்லல்படும் கிறிஸ்துவுக்குள்ளான மக்கள், இதற்கான விண்ணப்பத்தை முறைப்படி பூர்த்தி செய்து அனுப்பி, ஒரு கணிசமான நிதியை உதவியாகப் பெறலாம்.

இந்த உதவி ஆண்டுக்கு 26 நபர்களுக்கு மட்டுமே என்பதை கவனத்தில் கொள்ளவும்.

நன்றி.

# இடுக்கமான வழி

வாழ்க்கையில், தேர்ந்தெடுக்கின்ற சம்பவங்கள் தொடர்ந்து வரக் கூடியதாக இருக்கிறது என்று இயேசு பிரசங்கித்தார்.

இடுக்கமான அல்லது விசாலமான வழிகளில், ஒன்றை தேர்ந்தெடுப்பது வாழ்க்கையில் அடிப்படையானதாகும் “இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்;கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவங்கள் அநேகர் ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது அதை கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்” என்றார்(மத்:7-13-14). சீஷத்துவத்தின் வழி இலகுவாகவும், கஷ்டமில்லாமலும் இருக்கும் என்று இயேசு பாசாங்கு செய்யவில்லை, அவர் அதின் கஷ்டத்தையும், நஷ்டத்தையும் குறித்து பேசினார். சுலபமான வழி ஒன்று உண்டு அதன் முடிவு மரணம், அழிவு, அல்லது தேவனை விட்டு நிரந்தரமான பிரிவு.

## கிறிஸ்தவத்தின் வழி இடுக்கமானது என ஏன் கிறிஸ்து கூறினார்?

### 1. சீஷத்துவத்தின் கட்டளைகள் இடுக்கமாய் இருப்பதால் (மத் 7:21;16:24)

நீங்கள் இந்துவாகவோ, முஸ்லீமாகவோ, யூதராகவோ, புத்த மதத்தவராகவோ பிறக்கலாம். ஆனால் கிறிஸ்தவனாக பிறக்க முடியாது. நீங்கள் மறுபடியும் பிறப்பது அவசியம் (யோ 3:5) அதற்கு தெளிவான முடிவு, சிறந்த தேர்வு, விடாமுயற்சி ஆகியவை தேவைப்படுகிறது. இயேசு பூரண, வெளிப்படையான கீழ்படிதலை எதிர்பார்க்கிறார் (லூக்:6:46; எபி 5:8-9).

### 2. சத்தியம் இடுக்கமாய் இருப்பதால்:- (யோ 8:32)

சத்தியத்தை விசாலமாக்கி அதில் பொய்யை பெருக்கின பின்பு அது சத்தியமாயிருக்க கூடாதே! எல்லோருக்கும் பொருந்தும் படியாய் சத்தியம் நீண்டு சுருங்கும் தன்மையுடையது அல்லவே. சத்தியம் அதின் தன்மையின்படியே கட்டுப்பாடு உடையதாய் இருக்கிறது. “கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல(2யோ 9).

**3. சிலுவையின் கோட்பாடு இடுக்கமாய் இருப்பதால்:-**

இயேசு கெத்செமனேயில் ஜெபம் செய்தபோது இடுக்கமான ஒன்றைத் தெரிந்தெடுக்க வேண்டியிருந்தது. பிதாவின்சித்தத்தை நிறைவேற்ற சிலுவைக்கு தன்னை ஒப்புக்கொடுக்கவேண்டியதாயிருந்தது. கிறிஸ்தவ வாழ்க்கை நம்மிடத்திலும் அவ்விதமான கீழ்படிதலை எதிர்பார்க்கிறது(தீத்து 2:12)

நாம் விசாலமான பாதையை அல்லது இடுக்கமான பாதையை தேர்வு செய்ய வேண்டும். விசாலமான பாதை பார்ப்பதற்கு எளிதாகவும், வரவேற்கிறதாகவும் இருக்கும். ஆனால் நெருக்கமான வழி கஷ்டமானதும், உரிமையுடன் கேட்கப்படுவதுமாய் இருக்கும். ஆனால் முடிவில்; விசாலமான வழியோ ஆத்துமா அழிவையுண்டுபண்ணும். நெருக்கமான வழியோ ஆத்துமா வாழ்வை உண்டுபண்ணும்.

**அழிவா! வாழ்வா! தேர்ந்தெடுப்பீர்.**

**– பாபி டாக்ரி**

## அப்போஸ்தலருடைய நடபடிகளில் பேதுருவும், பவுலும்

| | |
|---|---|
| 1. முதல் பிரசங்கம் (2ம் அதிகாரம் | 1. முதல் பிரசங்கம் (13ம் அதிகாரம்) |
| 2. சப்பாணி குணப்படுதல்(3) | 2. சப்பாணி குணப்படுதல் (14:8) |
| 3. மாயவித்தைக்காரனாகிய சீமோன் (8) | 3. மாயவித்தைக்காரனாகிய பர்யேசு(13) |
| 4. நிழலின் தாக்கம் (5:15) | 4. கைக்குட்டையின் தாக்கம் (19:12) |
| 5. கைகளை வைத்தல் (8) | 5. கைகளை வைத்தல் (19) |
| 6 .பேதுரு வணங்கப்பட்டார் (10) | 6. பவுல் வணங்கப்பட்டார் (14) |
| 7. தொற்காள் உயிரோடு எழுப்பப்பட்டாள் | 7. ஐத்திகு உயிரோடு எழுப்பப்பட்டான்(20) |
| 8. பேதுரு சிறைப்பட்டார் (12) | 8. பவுல் சிறைப்பட்டார் (28) |

# வாசிப்பதின் பலன்கள்

வாசிப்பது எல்லா மனிதனுக்கும் அவசியம். வாசிப்பதன் மூலம் நாம் அநேக காரியங்களை அறிந்து கொள்ள முடியும். வாசித்தலின் அவசியத்தை நாம் உணரவேண்டும். குறிப்பாக, தேவனுடைய வார்த்தையை வாசிப்பதின் முக்கியத்துவம் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

வாலிபர்களுக்கு தேவனுடைய வார்த்தை மிக முக்கியமான ஒன்றாய் இருக்கிறது. பரிசுத்தமும் பக்தியுமான வாழ்க்கை வாழ்வதற்குரிய பிரயோஜனமான விஷயங்களை அது வாலிபர்களுக்கு தருவதாய் இருக்கிறது (சங் 119:11 பிர 11:9)

தேவனுடைய வார்த்தை, நம்மை பாவத்திலிருந்து மீட்கவும் இப்பூலோகத்தில் பரிபூரண வாழ்க்கையையும், பரலோகத்தில் நித்திய வாழ்வையும் தருகின்ற நம்முடைய ஆண்டவரின் செய்தியை உடையதாய் இருக்கிறது (யாக் 1:2 யோ 10:10 Iபேது 1:5)

தேவனுடைய வார்த்தை அவருடைய பிள்ளைகளின் ஆத்துமாவை பக்திவிருத்தி அடைய செய்யும் (அப் 20:32) தேவனுடைய வார்த்தையை தன்னுடைய வாழ்க்கையில் பயிற்சி செய்யும்பொழுது தெய்வீக குணங்களை வளர்க்கவும், நமக்கு உதவியாய் இருக்கும்.

தேவனுடைய வார்த்தை நொறுங்குண்ட இருதயத்திற்கு ஆறுதலாய் இருக்கும் (I தெச 4:18) முதல் நூற்றாண்டு சகோதரர்கள் தங்களுக்கு அன்பானவர்களை இழந்த போது துக்கித்தார்கள். பரிசுத்த ஆவியானவர் பவுலிடம் மக்களை ஆறுதல்படுத்தும் உண்மையான வார்த்தைகளை எழுதும்படி ஏவினார்.

தேவனுடைய வார்த்தை விசுவாசத்தை உண்டுபண்ணுகிறதாய் இரு க்கிறது (ரோமர் 10:17, யோ 20:30,31) விசுவாசம் நம்பிக்கையின் அஸ்திபாரமாய் இருக்கிறது (எபி 11:1)

வேதாகமத்தை முழுவதுமாய் விடாமல் வாசித்து முடிக்க 70 மணி நேரம் ஆகும். பழைய ஏற்பாட்டை மட்டும் தனியாக வாசிக்க 52 மணி நேரமும், புதிய ஏற்பாட்டை மட்டும் வாசிக்க 18 மணி நேரமும் ஆகும். ஒருவன் வேதாகமத்தை ஒரு நாளுக்கு ஒரு மணி நேரம் வாசித்தால், முழுவதுமாக அவன் வேதாகமத்தை வாசித்து முடிக்க 2 மாதங்களும் 10 நாட்களும் ஆகும்.

வேதாகமத்தை வாசிப்பது தங்க சுரங்கத்தில் வேலை பார்ப்பது போன்றதாகும். தேவனுடைய சத்தியத்தில் விலைமதிப்பற்ற செல்வம் உள்ளது. வேதாகமத்தை வாசிப்பது வைரங்கள் தேடுவது போன்றதாகும், சத்தியம் என்னும் விலையுயர்ந்த ஆபரணங்கள் ஒவ்வொரு பக்கத்திலும் காணப்படுகிறது.

வேதாகமத்தை இந்த ஆண்டு வாசிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்தவர்கள் தொடர்ந்து வாசியுங்கள். ஒருவேளை வேதாகமத்தை வாசிக்க ஆரம்பித்து, பாதியில் நிறுத்தியிருந்தால், நீங்கள் மீண்டும் புதிதாய் வேதாகமத்தை வாசிக்க இன்னும் நேரமிருக்கிறது. நீங்கள், அநேகர் செய்து முடிக்காத காரியத்தை செய்து முடிப்பவர்களாய் இராமல், உங்கள் வாழ்க்கையை மேம்படுத்துவதும் பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்திரத்தைக் கொடுப்பதுமாய் இருக்கின்ற சத்திய வசனத்தை தொடர்ந்து வாசிக்கிறவர்களாயிருங்கள்.


# அருமையான வாய்ப்பு

**திருமறை ஆசான்** மாத இதழை வெளியிடும் நாங்கள் உங்கள் ஆத்ம வளர்ச்சிக்கென இரு புத்தகங்களை **'பரிசுத்த ஆவியானவரின் பணி', 'புதிய ஏற்பாட்டு ஆராதனை'** என்ற தலைப்புகளில் வெளியிட்டுள்ளோம்.

தரமான தாளில் அச்சிடப்பட்டு, நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, அழகிய தோற்றமுடையதாய் வடிவமைக்கப்பட்டுள்ள இந்நூல்கள் சுமார் 200 பக்கங்களைக் கொண்டது.

சத்தியம் விரும்பிகள் அனைவருக்கும் நிறைந்த பயனைத் தரக் கூடியது. **புத்தகங்கள் முற்றிலும் இலவசம்.** தபாலில் பெற விரும்புவோர் அனுப்ப வேண்டிய தொகை ரூ. 20/- மாத்திரமே.

முகவரி : **தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27, காங்கயம் - 638 701.

குறிப்பு : தயவு செய்து M.O. மாத்திரம் அனுப்பவும். மணியார்டர் கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதுங்கள்.

# சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

சத்தியம் நம்மை விடுதலையாக்கும் என்று இயேசு மொழிந்திருக்கிறார் (யோ 8:32) விடுதலையானது, ஒருவன் சத்தியத்தை அறிவதின் மூலம் உண்டாகும் என்று முன்மொழிந்திருக்கிறார். சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.

இந்த அடிப்படையான உண்மை, வாழ்க்கையின் எல்லாப் பகுதிக்கும் பயன்படும். அது, ஆவிக்குரிய விடுதலைக்கு, தேவன் எழுதி தந்திருக்கின்ற வேதாகமத்தை முறைப்படி படிப்பது அதிக முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது!

விழுந்து போனவர்களின் எடுத்துக்காட்டுகள் நிறைந்ததாய் இருக்கிறது வேதாகமம். கள்ளப்போதகரோடும், அவரின் வழிகளோடும், பவுலுக்குள்ள அனுபவம், நமக்கு கள்ளத்தன்மையின் அடிமைத்துவத்தை குறித்து கோடிட்டுக் காட்டுகிறது. "குமாரனாகிய தீமோத்தேயுவே, உன்னைக்குறித்து முன் உண்டான தீர்க்கதரிசனங்களின்படியே, நீ அவைகளை முன்னிட்டு நல்ல போராட்டம்பண்ணும்படி இந்தக் கட்டளையை உனக்கு ஒப்புவிக்கிறேன்; நீ விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவனாயிரு. இந்த நல்மனச்சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள். இமெனேயும், அலெக்சாந்தரும் அப்படிப்பட்டவர்கள்; அவர்கள் தூஷியாதபடி சிட்சிக்கப்பட அவர்களைச் சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தேன் (1 தீமோ 1:18-20)

இந்த சம்பவத்திலிருந்து அலெக்சாந்தர் மங்கி மறைந்து போனாலும், இமெனேயின் நாசவேலை தொடர்ந்தது, பவுல், தீமோத்தேயுக்கு மீண்டும் இதை நினைப்பூட்டுகிறார். "இவைகளை அவர்களுக்கு நினைப்பூட்டி, ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாமல் கேட்கிறவர்களைக் கவிழ்த்துப்போடுகிறதற்கேதுவான வாக்குவாதம் செய்யாதபடிக்கு, கர்த்தருக்கு முன்பாக அவர்களுக்கு எச்சரித்துப் புத்திசொல்லு, நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு, சீர்கேடானவீண் பேச்சுகளுக்கு விலகியிரு; அவைகளால் அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள். அவர்களுடைய வார்த்தை அரிபிளவையைப்போலப் படரும்; இமெநேயும் பிலேத்தும் அப்படிப்பட்டவர்கள். அவர்கள் சத்தியத்தை விட்டு விலகி, உயிர்த்தெழுதல் நடந்தாயிற்றென்று சொல்லி சிலருடைய விசுவாசத்தைக்

கவிழ்த்துப்போடுகிறார்கள், ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது; கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும், கிறிஸ்துவின் நாமத்தை சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக்கடவனென்பதும், அதற்கு முத்திரையாயிருக்கிறது. (II தீமோ 2:14-19).

இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனாகிய பவுலுக்கு, தவறுகளை கண்டிப்பதும், அவைகளை வெளிக்காட்வதுமே உகந்ததாய் இருந்தது. இதற்கு குறைவாய் செய்வது, உண்மையை தூக்கில் இடுவதற்கும், பொய்யை சிங்காசனத்தில் அமரச்செய்வதற்கும் சமம் என்று ரஸ்சல் லோவெல் என்பவர் எழுதியுள்ளார். மேலும் பவுல் தீமோத்தேயுவையும் எச்சரிக்கின்றார். "புத்தியீனமும் அயுக்தமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து, அவைகளுக்கு விலகியிரு, கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல் எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனு மாயிருக்க வேண்டும். எதிர்ப்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியு ம்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும் (2தீமோ 2:23-26) என்று.

சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டணம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்தி சொல்லு, ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ள வர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி கட்டுக் கதைகளுக்கு சாய்ந்துபோகும் காலம் வரும். நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ள வனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று. (2 தீமோ 4:2-5) "சத்தியம் உங்களை விடுதலையாக்கும்".

தமிழில் : ஜே. பிக்கின்ஸ் டேவிட் வே

# ஆகாய் தீர்க்கனின் புத்தகம்

| | | |
|---|---|---|
| பெயரின் பொருள் | : | சந்தோஷமான நபர் |
| காலம் | : | கி.மு. 520 |
| யாருக்கு | : | மீதியான ஜனங்கள் |
| பொருள் | : | தேவாலயத்தை மீண்டும் கட்டுதல் |
| சிறப்பு | : | தலைகீழாய் மாறிப்போன மனோ நிலை தோல்வியிலிருந்து வெற்றிக்கு |
| புறக்குறிப்பு | : | I எழுந்திருக்க ஒரு செய்தி (தேவாலயத்தைக் கட்டுதல் 1:1-15)<br>II உதவிக்கு ஒரு செய்தி (நான்உன்னோடு இருக்கிறேன். 2 : 1 -9).<br>III. உறுதிப்படுத்த ஒரு செய்தி (இந்நாள் முதற்கொண்டு நான் உன்னை ஆசீர்வதிப்பேன் 2:10-19)<br>IV. நம்பிக்கை ஏற்படுத்த ஒரு செய்தி (அந்த நாளில் நான் உன்னை உண்டாக்குவேன் 2:20-23). |

## இது தரும் பாடங்கள்

1. கடமை தவறுவதற்கு அதைரியத்தை காரணமாக்க முடியாது.
2. நல்லது செய்ய இதுவே தருணம்.
3. அனைத்து போதனைகளும் "கர்த்தர் சொல்கிறார்" என்பதே அடிப்படை
4. தேவனுடைய வேலை பாழடைந்து கிடக்கும்போது நாம் வசதியாக வாழ்ந்து கொண்டிருக்கக் கூடாது.
5. நாம் மனந்திரும்பாவிடில், எத்தகைய பரிசுத்த சேவையும் (சபை வேலையும்) நம்மை சுத்திகரிக்க முடியாது.
6. நடைமுறைப் பிரச்சனைகள், நேரிடையான போதகங்களுக்கு காரணமாகிறது.
7. காலம் தாழ்த்துதல் ஒரு தொற்று நோயாக மாற முடியும்.

# நம்மை நாமே வஞ்சிப்பது எப்படி?

நாம் மூன்றுவகையில் வஞ்சிக்கப்படுகிறோம். நம்மைநாமே வஞ்சிக்கிறோம். மனிதர்களால் வஞ்சிக்கப்படுகிறோம். சாத்தானால் வஞ்சிக்கப்படுகிறோம்.

**நம்மைநாமே வஞ்சிக்கிறோம்**

I கொரிந் 3:18 ஒருவன் தன்னைத்தானே வஞ்சியாதிருப்பானாக, இவ்வுலகத்திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால், அவன் ஞானியாகும்படிக்குப் பைத்தியகாரனாகக்கடவன். இன்று அநேக பிரிவினர் தங்கள் தங்கள் பிரிவுக்குரிய வேதாகமப்பள்ளியில் படித்துத் தங்களை ஞானிகளாக நினைக்கிறார்கள். வேதாகமத்தின் படி செய்வதில்லை, மனிதர்களால் கட்டளையிடப்படுகிறார்கள். அதையே செய்கிறார்கள். தவறைச் சுட்டிக் காட்ட தைரியம் இல்லை. வேலை போய்விடும். வயிற்றுப் பிழைப்பும் பிரச்சினைக்குள்ளாகும் : போப் என்ன சொல்லுகிறாரோ அதுவே வேதவாக்கு அதுபோல் ஆர்ச் பிஷப் என்ன கட்டளையிடுகிறாரோ அதுவே வேதவாக்கு. பட்டம் பெற்ற இவர்களுக்கு தாங்கள் தவறான வழியில் போதிக்கிறோம் என்று தெரியும். குருடருக்கு வழிகாட்டும் குருடர்கள் இருவரும் குழியில் விழுவார்கள் என்று வேதம் கூறுகிறது.

நான் இங்குள்ள எனக்கு நன்கு அறிமுகமான குருமார்களிடம் அவர்கள் போதனை பொய்யானது என்று சுட்டிக்காட்டியும் அவர்கள் முடிவில் சொல்வது நாங்களும் கிறிஸ்துவையே வணங்குகிறோம் என்று சத்தியத்தை தட்டிக் கழித்துவிடுகிறார்கள். நான் பிறந்து வாழ்ந்த ஊரிலிருந்து சபை கட்டிடத்திற்காக பணம் வசூலிக்க ஒரு குருவானவர் வந்து என்வீட்டில் தங்கியிருந்தார். அவருடன் இரண்டுநாள் அப்போஸ்தலரின் உபதேசத்தைப் பற்றிப் பேசினேன். நான் வேதத்தின் மூலம் பேசிய யாவற்றையும் ஒப்புக் கொண்டார். முடிவாக என் குருபட்டம் போய்விடுமே பிழைக்க வழி என்ன என்றார். வயிற்றுப் பிழைப்புக்காக வஞ்சிக்கப்படுகிறோம். இரட்சிப்பு முக்கியமல்ல, வயிற்றுப் பிழைப்பே முக்கியம் என்று அநேகர் வஞ்சிக்கப்படுகிறார்கள்.

I கொரிந் 15:33 மோசம் போகாதிருங்கள் ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும். கிறிஸ்தவன் தனக்கு பக்தி விருத்திக்கு ஏதுவல்லாத எந்த சம்பாஷணைகளிலும் கலந்துகொள்ளக் கூடாது. சில சமயங்களில் உலக கண்ணிகளில் தப்பிவர முடியாதபடி சிக்கிக் கொள்வான். அவன் நல்லொழுக்கம் நாசமாய்ப் போய்விடும். மனுஷர் பேசும் வீணான

வார்த்தைகள் குறித்து நியாத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும். ஏனெனில் உன் வாத்தையினாலே நீதிமான் அல்லது குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்.

I யோவான் 1:8-10 நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது. இன்று அநேக கிறிஸ்தவர்களும் ஊழியர்களும் முழுக்க முழுக்க பாவத்துக்குள்ளே ஜீவிப்பதினால் தாங்கள் பாவம் செய்கிறோம் என்பதையும் மறந்துவிடுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பாவங்களை மறைக்காது அறிக்கையிட்டு கிறிஸ்துவினிடத்தில் மன்னிப்பைப் பெற வேண்டும். உங்களை நீங்கள் வஞ்சியாதிருங்கள்.

கலாத் 6:7 மோசம்போகாதிருங்கள் தேவன் தம்மைபரியாசம் பண்ணவொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தீமையான உபதேசங்களை விதைத்தவன் முடிவில் தீவினையையே அறுப்பான். சுயநலத்திற்காக தேவனை புறக்கணிக்கிறவன் கடைசியில் தேவனால் புறக்கணிக்கப்படுவான்.

## மனிதர்கள் நம்மை வஞ்சிக்கிறார்கள்.

மத் 24:4,5,11 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்திரமாக ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் அநேகர் வந்து என் நாமத்தைத் தரித்துக் கொண்டு நானே கிறிஸ்து என்று சொல்லி அநேகரை வஞ்சிப்பார்கள். இன்று ஏறக்குறைய 3000 பிரிவுகள் இருப்பதாகவும் எல்லாரும் தாங்கள் கூடும் சபையே உண்மையானதென்று பொய்சொல்லி மக்களை ஏமாற்றி விடுகிறார்கள். அநேகம் கள்ளதீர்க்கதரிசிகளும் எழும்பி அநேகரை வஞ்சிக்கிறார்கள்.

அப் 20:29.30 நான் (பவுல்) போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களில் சிலர் எழும்பி சீஷர்களை தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆகவே மந்தையை மேய்ப்பவர்கள் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். கிறிஸ்து இரண்டாம் தரம் வந்துவிட்டார் என்று யெகோவா சாட்சிக்காரர்கள் அநேகரை திசை திருப்பி வஞ்சிக்கிறார்கள். பெந்தெகொஸ்தே சபை. அசம்பிளி ஆப்காட் சபைகள் இன்னும் அற்புத அடையாளங்கள் செய்யலாம் என்று பொய்சொல்லி மக்களை வஞ்சிக்கிறார்கள். அவர்கள் உபயோகிக்கும் வார்த்தை கிறிஸ்து நேற்று இன்றும் என்றும் மாறாதவர் என்பது.

ரோமர் 16:17,18 நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களையும் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அவர்களைவிட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து சுயவசனிப்பிலும் இச்சகப் பேச்சிலும் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள். தென் இந்திய மாவட்டங்களிலிருந்து சில ஊழியர் தாங்கள் எந்த சபையையும் சேர்ந்தவர்கள் அல்ல கிறிஸ்துவை மட்டுமே போதிக்கின்றோம், சபை முக்கியமல்ல என்று சிலகாலம் பிரிவினை சபைகளில் உள்ள குருவானவர்களை வஞ்சித்து பணம் சேகரித்துக்கொண்டு சென்றுவிட்டார்கள்.

**சாத்தானால் வஞ்சிக்கப்படுகிறோம்**

இந்த உலகத்தின் மகிமையை, வேடிக்கை காட்டி சாத்தான் மக்களை வஞ்சிக்கிறான். இன்று அநேகர் அவனைப் பணிந்துகொண்டு அவன் காட்டுகிற ஆஸ்தி, சம்பாத்தியம், உத்தியோகம் என்ற மாயைகளில் சிக்கிக்கொள்ளுகிறார்கள். உலகக்கவலை ஐசுவரியத்தின் மயக்கம் சிலரை வஞ்சித்துவிடுகிறது.

IIகொரி 4:4 தேவனுடைய சாயலிலிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய சாத்தான் அவர்களின் மனதைக் குருடாக்குகிறான். எபே 4:27 பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள். சாத்தான் பொய் பேசுவதில் வெகு சமர்த்தன். கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றித்திரிந்துகொண்டிருக்கிறான். அவனின் மாயையில் சிக்கிக்கொள்ளாதிருங்கள்.

**ஞானம்**
**மலேசியா.**

# வேறொரு சுவிசேஷம் இல்லையே

சுவிசேஷம் என்றால் நல்ல செய்தி என்று அர்த்தம். அந்த நல்ல செய்தி இரட்சிப்பு தான் அந்த இரட்சிப்பை இயேசு மட்டுமே அருளமுடியும். பிதாவாகிய தேவன் இயேசுவை குறிப்பிட்ட காலத்தில் இந்த உலகத்திலே அனுப்பி பிறக்கச் செய்தார். மனிதரின் பாவங்களை மன்னிக்கவும் இரட்சிப்பை இலவசமாக அருளவும் இயேசு ஞானத்திலும் தேவகிருபையிலும் மனித தயவிலும் வளர்ந்தார்.. பின்னர் தக்க வயது வந்ததும் ஜனங்களுக்கு நல்ல கருத்துக்களை போதித்தார். மத் 5,6,7 ம் அதிகாரங்களை வாசியுங்கள் பின்னர் பிதாவினால் குறிப்பிட்டபடி ஜனங்களின் பாவத்தை நீக்கும் தேவ ஆட்டுக்குட்டியாக சிலுவையில் அறையப்பட்டு இரத்தம் சிந்தினார். பின்பு மரித்து அடக்கம் பண்ணப்பட்டார். மூன்றாம் நாள் தான் சொன்ன பிரகாரம் உயிர்த்தெழுந்தார். மரண பயத்தை நீக்கிவிட்டார். மரணத்திற்கு பின்னர் உயிர்தெழவேண்டும் என்பதையும் மனுஷருக்கு தெளிவுபடுத்தினார். கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின் தன் அப்போஸ்தலரை நோக்கி, நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். கிறிஸ்துவின் மேல் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். இதுவே இரட்சிப்பு.

இரட்சிப்பு இலவசம். பணம் செலவு செய்ய வேண்டியதில்லை மனம்திரும்பி ஞானஸ்நானம் பெறவேண்டும். இந்த கட்டளைக்கு ஏழை, பணக்காரன் யாவரும் எந்தக் கஷ்டமும் இன்றி கீழ்ப்படியமுடியும். இந்த நற்செய்தியை சுருக்கமாக Iகொரி 15:3,4 பவுல் அப்போஸ்தலன் இவ்வாறு கூறுகிறார். நான் அடைந்ததும் அல்லது பெற்றதும் உங்களுக்கு பிரதானமாக முக்கியமாக ஒப்புவித்தும் பிரசங்கித்ததும் என்ன வென்றால் கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் பின் அநேகருக்கு தரிசனமானார். இதுவே நற்செய்தி என்கிறார்.

(கி.பி33) ஆதியில் அப்போஸ்தலருக்கு இந்த ஒரு சுவிசேஷமே கொடுக்கப்பட்டது. அன்று சுவிசேஷத்தைக் கேட்டவர்கள் இருதயத்திலே குத்தப்பட்டு பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றார்கள். கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டவர்களை தன் சரீரமாகிய சபையில் சேர்த்துக்கொண்டார் இரட்சிக்கப்பட்டவர்கள் அப்போஸ்தலருடைய

உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும் ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த்தரித்திருந்தார்கள். கி.பி.58ல் முன்பு பவுல் சொல்லியபடி அப் 20:29,30 அதாவது நான் போன பின்பு மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும் உங்களில் சிலர் எழும்பி சீஷர்களை தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன். பவுல் சொன்ன பிரகாரம் கலாத்தியா சபையில் வேறோரு சுவிசேஷத்துக்கு திரும்புகிறதைக்கண்டான், உடனே கண்டனம் செய்து இவ்வாறு கூறுகிறார். உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன். வேறொரு சுவிசேஷம் இல்லையே சிலர் உங்களைக்கலகப்படுத்தி கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல.

நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல் நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப் பட்டவனாயிருக்கக்கடவன். அவன் பிரசங்கித்த ஒரே சுவிசேஷத்தை கிறிஸ்துவிடம் நேரடியாகப் பெற்றேன் என்று பவுல் சொல்லுகிறார். ஆகவேதான் அவர் சபைகளுக்கு பிரசங்கிக்கும் பொழுது என்னைப் பின்பற்றி நடங்கள் என்று வலியுறுத்திக் கூறுகிறார்.

முதன் முதல் கி.பி. 600 முதல் ரோமாபுரியிலுள்ள கிறிஸ்துசபை பலவீனம் அடைந்தது. அதைக் கண்ட சபையில் உள்ள ரோமர்கள் அவர்கள் ஆராதனையில் புற ஜாதியாருடைய ஆராதனையையும் நியாப்பிரமாணத் திலுள்ள தூபங்காட்டுதலையும் சேர்த்து கொண்டார்கள் அதை ரோம சபை என்று அழைத்தார்கள். நாளடைவில் அதிலிருந்து மார்ட்டின் லூதர் பிரிந்தார் பின்பு இங்கிலாந்து மன்னர் தன் மனைவியை விவாகரத்துச் செய்ய அனுமதி கேட்டார். அன்றுள்ள போப் மறுத்ததினால் தனக்குச் சாதகமாக ஆங்கிலிக்கன் சபையை நாபித்தார். இந்த சபைகள் கிறிஸ்துவை மையமாக வைத்து வெவ்வேறு உ தேசங்களை பிரசங்கித்தார்கள்.

வேதாகமத்தின்படி நடவாமல் தங்களுக்கென்று சட்ட திட்டங்களை வகுத்து அதின்படி போதிக்கிறார்கள். இன்றுவரை அதன் பின்பு அவர்களில் இருந்து அநேகர் பிரிந்தனர். பிரிந்தவர்கள் தங்களுக்குச் சாதகமாக வேதத்தையும் மாற்றினார்கள் போதகத்தையும் மாற்றினார்கள். இன்று ஏறக்குறைய 3000 பிரிவுகள் இருப்பதாக மத ஏடுகள் கூறுகின்றன. இந்த 3000 பிரிவினரும் கையில் வைத்திருப்பது வேதாகமம். போதிப்பது அதற்கு மாறாக. வேதாகமத்தின் படி போதித்தால் அப்போஸ்தலருடைய உபதேசங்களில் நிலைத்திருப்பார்கள். ஒரே சுவிசேஷம் ஒரே சபைதான் இன்றுவரை இருந்திருக்கும். அஸ்திபாரம் இயேசுவே

போதனை ஒன்றுக்கொன்று மாறுபட்டவைகள் முரண்பாடானது. இந்த சபைகள் எல்லாம் அக்கினியினால் சோதிக்கப்படும் என்று வேதம் கூறுகிறது. வேறொரு சுவிசேஷம் இல்லையே கிறிஸ்து சபை தவிர வேறொரு சபை வேதாகமத்தில் காணப்படவில்லையே! அப்படியானால் இந்த 3000 சபைகளும் மனிதரால் உண்டாக்கப்பட்டவை சபிக்கப்பட்டவைகள் என்று வேதம் கூறுகிறது.

**ஞானம்,**
**மலேசியா**

# வேதமும் அப்படியே சொல்லுகிறது:

இரவும், பகலும் தியானமாய் இருக்கிற மனுஷன் அநேகமுறை கொரிந்தியர் நிருபத்தை வாசித்திருப்பான். பவுல், கொரிந்து சபையின் ஆராதனைசீர்கேட்டை, சீர்செய்ய சில காரியங்களை எழுதுகிறார். அப்படி எழுதும்போது சபையில் ஸ்தீரிகள் பேசாதிருக்கக்கடவர்கள் என்று எழுதுகிறார், "வேதமும் அப்படியே சொல்லுகிறது" I கொரி 14 : 34 என்கிறார். நமக்கு நன்றாய் தெரியும், வேதாகமத்தில் மூன்று காலங்களும், அந்த காலத்திற்கு ஏற்ப சட்டமும் கொடுக்கப்பட்டுள்ளது.

| காலம் | சட்டம் |
|---|---|
| 1. பிதாக்களின் காலம் | 1. படைப்பின் சட்டம் (வாய்மொழி சட்டம்) |
| 2. மோசேயின் காலம் | 2. நியாயப்பிரமாணம் (10 கட்டளை) |
| 3. கிறிஸ்துவின் காலம் | 3. கிறிஸ்துவின் கட்டளைகள் (புதிய ஏற்பாடு) |

ஒவ்வொரு காலம் முடிந்ததும் அதன் சட்டமும் முடிவுபெற்றது. கிறிஸ்துவின் காலம் இப்பொழுது நடைபெறுகிறது.

பவுல், இங்கே வேதம் என்று எதை குறிப்பிடுகிறார்? சற்று ஆராய்வோமா? இங்கே பெண்களைப் பற்றி இங்கு குறிப்பிடுகிறார். ஆதலால் அவர்களைக் குறித்து நாம் கண்டறிய படைப்பை நோக்கி நம் கவனத்தை செலுத்துதல் நன்று. மனிதனை தேவன் எப்படி படைத்தார் என்பதை எந்த புத்தகம் எடுத்துரைக்கிறது? நமக்கு நன்றாய் தெரியும் ஆதியாகமம் புத்தகம் என்று. ஆகவே நமது கவனத்தை அந்த புத்தகத்திற்கு திருப்புவோம் வாருங்கள்.

1. முதலாவதாக :- ஸ்தீரி மனிதனுக்கு ஒரு உதவிக்காரியே தவிர, அதிகாரியல்ல(ஆதி 2:18)

2. இரண்டாவதாக:- அவளின் ஆசை புருஷனைப் பற்றியிருக்கும் (ஆதி 3:16)

3. மூன்றாவதாக:- புருஷன் (ஆண்) அவளை ஆண்டு கொள்வான்(ஆதி 3:16)

4. நான்காவதாக :- நன்மை தீமை அறியதக்க ஜீவவிருட்சத்தை புசிக்க வேண்டாம் என்று ஆதாமிடம், ஏவாளை உண்டாக்குவதற்கு முன்பே கட்டளையிட்டார் (ஆதி 2:17)

5. ஐந்தாவதாக :- இந்த ஆவிக்குரிய கட்டளையை ஆதாமிட மிருந்துதான் ஏவாள் அறிந்து கொண்டாள், ஆகவேதான் அவள் சர்ப்பத்திடம் அதை பற்றிய கேள்விக்கு பதில் கூறுகிறாள் (ஆதி 3:2) (1 தீமோ 2:11-15)

தேவன் ஆதியில், படைத்த இதே சட்டப்படிதான் (வேதத்தின் படிதான்) ஸ்திரீயானவள், ஆவிக்குரிய காரியங்களை தங்கள் சொந்த புருஷரிடம் (ஆணிடம்) அமைதலாய் கற்றுக்கொள்ள வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர், பவுலைக் கொண்டு நமக்கு தெளிவுபடுத்துகிறார்.

ஜே. பிக்கின்ஸ்.

## யார் யார் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும்?

1. மறுபடியும் பிறந்தவன் (திருமுழுக்கில்) (யோ 3:3,5 தீத்து 3:5)
2. ஆவியில் எளிமையுள்ளவர்கள் (மத் 5:3)
3. பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் (மத் 7:21)
4. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் (மத் 5:10–12)
5. வேதபாரகர் பரிசேயர் என்பவர்களின் நீதியிலும் அதிகமான நீதியுள்ளவர்கள் (மத் 5:20)
6. மனந்திரும்பி பிள்ளைகளைப்போல ஆனவர்கள் (மத் 18:3)
7. ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வைக்காதவன் (மத் 10:15–25)
8. கலப்பையின்மேல் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்காதவன் (லூக் 9:62)

ஜே. பிக்கின்ஸ்.

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/WO/ PP/5
Posted at Erode HPO on 20, **Nov 98**
**Nov 98** THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

**இயக்குநர்**
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
**த.பெ.எண். 27, காங்கயம்-638 701.**

Published by Church of Christ Kangayam and
Printed at Konar Printers, Madurai. Editor S.Rajanayagam.

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27,
KANGAYAM - 638 701.
Ph: 04257-20030

To

PRINTED MATTER

BOOK-POST